ஈருலகப் பேரொளி அண்ணலார்



ஆசிரியர் :

மௌலவி அல்ஹாஜ் அப்ஸலுல் உலமா

A.M. மீரான் அன்ஸாரி,

ஜமாலி, பைய்யாஜி சிஷ்தியுல் காதிரி

ஜமாஅத்துல் உலமா மக்தப்மதரஸா

மாவட்ட ஆய்வாளர், தேவிபட்டினம்.

வெளியீடு :

அன்னை ஆயிஷா (ரலி)

மக்தப் மதரஸா பைத்துல்ஜமாலி

கேணிக்கரை - இராமநாதபுரம்

செல் : 9597120099

PDF ISLAM

புத்தக விபரக் குறிப்பு

நூலின் பெயர் : உருலகப் பேரொளி அண்ணலார்

ஆசிரியர் : மௌலவி அல்ஹாஜ் அப்துல் உமர்
A.M. மீரான் அன்ஸாரி,
ஜமாலி. பைய்யாஜி
சிஷ்தியுல் காதிரி
ஜமாஅத்துல் உமர மக்தப்மதரஸா.
மாவட்ட ஆய்வாளர்.தேவிபட்டினம்.

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

முதல்பதிப்பு : 1437 - 2016

பக்கங்கள் : 60

பிரதிகள் : 2000

அச்சிட்டோர் : ரஹீம் பிரஸ். திருநெல்வேலி.
செல் : 98423 60784

வெளியீடு : அன்னை ஆயிஷா (ரலி) மக்தப் மதரஸா
பைத்துல்ஜமாலி
கேணிக்கரை - இராமநாதபுரம்
செல் : 9597120099

விலை : 25 ரூபாய் மட்டுமே

PDF ISLAM

ஈருலகப் பேரொளி அண்ணலார்

சமர்ப்பணம்:

இந்நூல் வெளிவர முழு முதற் காரணமாக திகழ்ந்த அஞ்ஞான இருளில் மூழ்கியிருந்த எங்களின் அகக்கண்களை வெளிச்சமாக்கி, வாழ்கையின் எல்லா அம்சங்களிலும் வழிகாட்டிய மெஞ்ஞான ஆசான் ஆரிபுபில்லாஹ், அல்லாமா, ஷைகுனா, வமுர்ஷிதுனா.

சர்க்கார் ஜமாலிஷாஹ் நூரி ஹஜ்ரத் கிப்லா

(ரஹிமஹுல்லாஹுத்தஆலா ரஹ்மதன் வாஸிஆ கத்த ஸல்லாஹு சிர்ரஹுல் அஜீஸ்)

அவர்களின் உயர் திருச்சமூகத்தில் இந்நூலை சமர்ப்பணம் செய்வதில் பெருமிதம் அடைகிறோம். மேலும் எங்களது சில்சிலயே நூரிய்யாவின் ஷைகுமார்களின் பாதங்களிலும் சமர்ப்பணம் செய்வதில் பெருமிதம் அடைகிறோம்.

இங்ஙனம்

ஆன்மீக குருமார்களின் பாதரட்சை

மௌலவி அல்ஹாஜ் அப்ஸலுல் உலமா

A.M.மீரான் அன்ஸாரி, ஜமாலி, பைய்யாஜி

சிஷ்தியுல் காதிரி

தேவிபட்டினம்.

PDF ISLAM

ஈருலகப் பேரொளி அண்ணலார்

உள்ளே இருப்பவை

1. முன்னுரை
2. ஸலவாத் சொல்வதின் சிறப்பைப்பற்றி பேசும் ஹதீஸ்கள்.
3. நபிமணியின் மீது உயிரை விட பிரியம் வைத்தல்.
4. நூரே முஹம்மதுவை அறிவது.
5. அண்ணலார் அகிலத்தின் பேரொளி.
6. மண்ணுலகில் அண்ணலாரின் அதிகாரம்.
7. விண்ணுலகில் அண்ணலாரின் அதிகாரம்.
8. ஹூருல்ஈன் (சுவனத்து அழகி) கள் பங்கீடு
9. ஈருலகப் பேரொளி
10. இறைவனுடன் பேசிய கலீமுல்லாஹ்
11. இறைவனை நெருங்கிய ஹபீபுல்லாஹ்
12. பெருமானாரின் தோற்றம் பெரும் அற்புதம்
13. மாநபிக்கே மீலாது விழா.
14. ஆயிரம் பேருக்கு விழா அண்ணலாருக்கு இல்லையா?
15. மதீனத்து சிறுமிகள் தஃப் அடித்து மாநபியை வரவேற்று பாடிய பாடல்!
16. நபிமணி மீது ஸலாம் பைத்து சொல்வது.

PDF ISLAM

எனது ஷெய்கு நாயகம், என் உயிரினும் மேலானோர் மெய்ஞ்ஞான தீபம், மௌலானா, அல்ஹாஜ், ஜமாலீஷாஹ் நூரி சிஷ்தியுல்காதிரி கிப்லா ஹஜ்ரத் அவர்களின் மகனார் (சஜ்ஜாதா) மனமுவந்தளித்த

மதிப்புரை

புகழும் பெருமையும் அல்லாஹ்த் ஆலா ஒருவனுக்கே ஸவாத்தும் ஸலாமும் ஈருலகப் பேரொளி முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தார்கள், தோழர்கள், முஃமின்கள், முஸ்லீம்கள் அனைவர்கள் மீதும் உண்டாவதாக. ஈருலகப் பேரொளி அண்ணலார் என்ற திருபெயரில் அரியதோர் சிறிய நூல் எனது சஜ்ஜாதா மௌலவி அல்ஹாஜ், அப்ஸலுல் உலமா, A.M. மீரான் அன்ஸாரி, ஜமாலீ, பைய்யாஜி சிஷ்தியுல் காதிரி அவர்கள் தொகுத்துள்ளார்கள் இந்நூலை முழுமையாக வரிக்கு வரி நான் பார்வையிட்டேன். இந்நூலின் பெயருக்கு பொருத்தமாக நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மாண்புகளையும், சிறப்புகளையும், அழகுபட விளக்கி உள்ளார்கள். அல்லாஹ் (ஜல்ல ஜலாலஹு) சொல்கிறான். அல்லாஹ்வை நீங்கள் நேசிக்கக் கூடியவராக இருந்தால் என்னை பின் தொடருங்கள், அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்று நபியே! நீர் கூறுவீராக, இந்த ஆயத்தின் (குர்ஆன்) அடிப்படையில் ரசூலுல்லாஹ்வை பின் துயர்வ தென்றால் அவர்கள் தங்கள் சரீரத்தால் எதை செய்து

PDF ISLAM

காட்டினார்களோ, தனது உள்ளதால் எதை உணர்ந்து காட்டினார்களோ, தன்னுடைய ரூஹால் அகப் பார்வையுடன் பார்த்தார்களோ அதே போன்று உம்மத்தார்களாகிய நாம் நம்முடைய சரீரம் உள்ளம் ரூஹீ இவைகளை செயல்படுத்திக் காட்டுவதற்கு பெயர்தான் பின் துயர்தல் ஆகும். அதன் அடிப்படையில் இந்நூலின் ஆசிரியர் அவர்கள் ரசூலுல்லாஹ்வைப்பற்றி உண்டான ஒரு சில விளக்கங்களை தந்து உள்ளார் என்பதை எண்ணிப் பாராட்டுகிறேன். ஆகவே இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் அனைவரும் இந்த அரிய நூலை வாங்கிப் படித்து பயன்பெற்று, நன்கு உணர்ந்து கூடுதலான முழுமையான விளக்கங்களை அதை தெரிந்தவர்களிடம் பெற முயற்சிக்க எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவர்களுக்கும் நல்லருள் புரிவானாக! ஆமீன்! இந்நூலை தொகுத்தளித்த நூலாசிரியர் அவர்களுக்கு இதுபோன்ற பல நூல்கள் எழுதி வெளியிட அல்லாஹ் அருள் புரிவானாக. இந்நூலாசியர் அவர்களுக்கும், இதனை வாங்கிப் படிப்பவர்களுக்கும், செவியேற்பவர்களுக்கும், இந்நூல் வெளிவர உதவியவர்களுக்கும் அல்லாஹ் (ஜல்ல ஜலாலஹூ) இவ்வுலகிலும் மறுஉலகிலும் எல்லா வகை நலன்களையும் வழங்கி ஈருலகிலும் சிறப்பாக்கி வைப்பானாக! ஆமீன்!

இங்ஙனம்

அல்லாமா, அல்ஆரிபு பில்லாஹ்,

அல்ஹாஜ்,அல்ஹாபிழ்

மௌலானா ஷாஹ் பஜ்லுர் ரஹ்மான் பைய்யாஜி

(ஸஹ்வீஷாஹ் ஜமாலி ஹஜ்ரத் கிப்லா)

சஜ்ஜாதா, சில்சிலயே ஜமாலிய்யா, ஆயங்குடி.

PDF ISLAM

எனது ஒப்பற்ற நாயகத்தின் இனிய மனைவி
(சஜ்ஜாதா) அவர்கள் வழங்கிய

வாழ்த்துரை

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வாழ்க்கை இந்த உம்மத்திற்கு ஓர் அழகிய முன் மாதிரியாகும். அதே நேரத்தில் அவர்களின் மீது அளவற்ற பாசத்தையும். நேசத்தை (காதலை) யும் வெளிப்படுத்துவது நம் அனைவரின் மீதும் கடமை யாகும். உலகு களப்போர்முனையிலே தம் குடும்பத்தார்களையெல்லாம் இழந்து தனிமரமாக நின்றாலும் பெருமானாரின் மீது அளவற்ற பாசத்தையும். காதலையும். வெளிப்படுத்திய வீர மங்கைகளின் உணர்வுகளை நினைக்கும் பொழுது நமது கண்கள் நீரை தாரைத்தாரையாக வெளிப்படுத்து கின்றன. உள்ளமும். உணர்ச்சிகளும். பொங்கி வழி கின்றன. இதை இந்நூலின் ஆசிரியர் அவர்கள் தத்ரூபமாக விளக்கியுள்ளார்கள். மாநபியவர்களுக்கு மீளாது ஏன் ? என்ற தலைப்பும் மிக அற்புதமாக உள்ளது. இதுபோன்ற பல நூல்கள் ஆசிரியர் அவர்கள் வெளியிட துஆவுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு
சஜ்ஜாதா, சில்சிலயே ஜமாலியா
ஆபாஜி.

PDF ISLAM

முன்னுரை:

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

நஹ்மதுஹூ வநுஸல்லி அலா ரசூலிஹில்கரீம்

எனதருமை இஸ்லாமிய உடன் பிறப்புகளே! எல்லாம் வல்ல ரஹ்மான் எம் பெருமானாரின் மூலமாக உயர்ந்த மார்க்கமான இஸ்லாத்தையும் இறை தூதராக நம் உயிரினும் மேலான நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களை தந்து நம்மை கண்ணியப்படுத்தி உள்ளான். நாம் எந்த அளவு அல்லாஹ்வின் தூதர் மீது பிரியம் வைத் துள்ளோம். என்பதை சற்று சீர் தூக்கி பார்க்க வேண்டி யுள்ளது. ஒரு சபையில் நபிமணி மீது ஸலவாத் சொல்லப்பட்டால் நாம் வாய்திறந்து ஸலவாத் சொல்லுகின்றோமா? அல்லது ஜும்ஆ உடைய பயான்களில் நபிமணி மீது ஸலவாத் சொல்லப்படுகிறதே அப்பொழுதாவது வாய்திறந்து ஸலவாத் சொல்கின்றோமா? நாம் வாய் பொத்தி மௌனிகளாவே இருந்து விடுகிறோம். ஸலவாத் சொல்லக்கூட தகுதியில்லாத நாம் எவ்வாறு நபிமணியின் உம்மத் என்று பெருமை கொள்ள முடியும்? நபிமணியின் சுன்னத்துக்களை ஹயாத்தாக்க முடியும்? நபிமணியை புகழ்ந்தால் கூட அல்லாஹ்வை மட்டும் தான் புகழ வேண்டும் நபியை வானளாவ புகழக்கூடாது என்று கூப்பாடு போடுகிறது ஒருகூட்டம்!! இத்தகையவர்களுக்கு இமாம் பூஸிரி (ரஹ்) அவர்கள் அழகான (புர்தா)கவியின் மூலம் நினைவூட்டுகிறார்கள்.

PDF ISLAM

உனது விருப்பம் போலெல்லாம் புகழ் மாலைகளை அண்ணல்நபி மணிக்கு சூட்டு உனது பக்தியின் சக்தியளவுக்கு மாண்புகளை சாற்று. அன்னவரின் மேனி எனும்புகளை பொன்மேனியை அனைத்துக் கொண்டு நிற்கும் (மதீனாவின்) மண்ணிற்கு நிகரான எந்த நறுமணமும் (உலகில் வேறு எங்கும் இல்லவே இல்லை) அதனை (நபிகளார் நல்லடக்கம் பெற்றிருக்கும் புனித ரவ்ழா ஷரீபை) முத்தீ முகர்ந்த (ஜியாரத் செய்த) புனிதருக்கே மங்களம். என்று இமாம் பூஸரி (ரஹ்) அவர்கள் புகழாரம் சூட்டுகின்றார்கள். நபிமணி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நாம் நம்மை போன்று சாதாரண மனிதனை போன்று மதீப்பீடு செய்து கொள்கிறோம். அவர்கள் அல்லாஹ்வுடைய நூர் என்பதை ஏற்றுக்கொள்ள மனது ஏன் தயங்குகிறது? நான் அல்லாஹ்வின் நூரிலிருந்து உண்டானவன் மற்ற சிருஷ்டிகள் எனது நூரிலிருந்து உண்டானவை என்பதாக நபிமணி கூறியிருக்கிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது. நபிமணியின் புனிதத் திருமேனியின் அமல்கள், ஹரகாத்துகள் ஆகியவற்றிக்கு ஷரீஅத் என்று பெயர் அவர்களின் தூய உள்ளத்தின் கைப்பிய்யாத் களுக்கும், ஜல்பாத்களுக்கும், தரீகத் என்று பெயர். தெளிவான அவர்களின் ரூஹ் உடைய அன்வார்களுக்கும், கமாலாத்துகளுக்கும் ஹகீகத் என்று பெயர் சங்கைக்குரிய எலிர் உடைய மர்தபாவின்

PDF ISLAM

பரகாத்துகளுக்கும் (அருள்களுக்கும்) மஃரிபத் என்று பெயர். சரீரம் கல்புக்கு கட்டுப்பட்டிருக்கிறது. கல்பு தனது உணர்ச்சிகளை சரீரத்தின் வாயிலாக வெளிப் படுத்துகின்றது. கல்பையுடையவர்களின் உதிப்புக்களும், உணர்ச்சிகளும், சரீர வாயிலாக வெளியாகின்றன. அந்த அமல்களே அவர்களுடைய வாழ்கையின் அழகிய முன்மாதிரிகளாக இருக்கின்றன. அதே முன் மாதிரிகள் நமக்கு வழிகாட்டிகளாகவும் இருக்கின்றன. நபிமணி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வாயிலாக வெளியான. மனோ உணர்ச்சிகள், ஷரீ அத்தையும் தரீகத்தையும் ஒருங்கே பொதிந்தவைகளாய் இருந்தன. அவர்களுடைய ஒவ்வொரு செயலின் வெளித்தோற்றமும் ஹக்க முகளுக்கு கட்டுப்பட்டதாயிருந்தது. அத்துடன் அதன் அந்தரங்கம் (பாத்தின்) அஸ்ரார் எனும் இரகசிய ஞானங்களைக் கொண்டு நிரம்பி இருந்தது என்று எங்களுடைய தாதாசர்க்கார் ஜுப்தத்துல் ஆரிபீன், குத்வத்துஸ்ஸாலிகீன், நூருல் மஷாயிக் அல்லாமா ஸையத்யிது நூரீ ஷாஹ் சர்க்கார் கிப்லா அவர்கள் தரீகத்தின் மர்த்தபாக்கள் என்ற தலைப்பில் விளக்கி கூறியுள்ளார்கள். ஆதலால் என தருமை இஸ்லாமிய சமுதாயமே! நபிமணி மீது அளவற்ற பாசத்தையும், உன்னதமான ஸலவாத்துக்களையும் ஒப்பு உவமையற்ற அவர்களின் படைப்பின் தத்து வார்த்தங்களை விளங்கி கோமான் நபியின் உதயதின விழாக்களை எடுத்து மகிழ்ந்து ஈருலகிலும் இதய வேந்தரின் துஆவையும்,

PDF ISLAM

ஷபா அத்தையும் பெற்றுக் கொள்ள வல்ல ரஹ்மான் அருள் புரிந்திடுவானாக!

நபிமணி மீது அதிகமான பிரியம் வைக்க வேண்டும். உயிரை விட நேசிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்நூல் ஒரு தூண்டு கோலாக இருக்க வேண்டும் என்பதே அடியேனின் ஆசை. அல்லாஹ் இந்த சிறு முயற்சியை கபூல் செய்து இதன்மூலம் உலகமக்கள் அனைவருக்கும் கியாமத் நாள் வரை பலன் தருவானாகவும், என்னை மன்னிப்பதற்கும் அல்லாஹ் இதை வஸீலாவாக ஏற்றுக் கொள்வானாக! ஆமின்!

இப்படிக்கு
ஆன்மீக குருமார்களின் பாதரட்சை
மௌலவி. அல்ஹாஜ். அப்ஸலுல் உலமா.
A.M. மீரான் அன்ஸாரி, ஜமாலி,பைய்யாஜி
சிஷ்தீய்யுல்காதிரி
ஜமாஅத்துல் உலமா மக்தப் மதரஸா
மாவட்ட ஆய்வாளர்.
தேவிபட்டினம்.



PDF ISLAM

ஹதீஸ் :

1.யார் ஒருவர் என் மீது ஒரு தடவை ஸலவாத் சொல்லுகிறாரோ. அவரின் மீது அல்லாஹ் பத்து விடுத்தம் ஸலவாத் சொல்லுகிறான் என்று நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள்.- ஹதீஸ்

2.யார் என்மீது அதிகமாக ஸலவாத் சொல்லுகிறாரோ அவரே சுவனத்துடைய மக்களில் ஏற்றமானவர்கள். -ஹதீஸ்

3.என்மீது ஆயிரம் தடவை ஸலவாத் சொல்லுகிற-வருக்கு சுவனத்தை கொண்டு நன்மாராயம் சொல்ல படுகிறவரை மௌளத்தாகமாட்டார். - ஹதீஸ்

4.யார் ஒருவர் என்மீது ஆயிரம் தடவை ஸலவாத் சொல்வாரேயானால் நெருப்பு எக்காலமும் அவனது மேனியை தீண்டாது. - ஹதீஸ்

5.என்மீது ஒருவர் ஸலவாத் சொல்வதை மறந்து விட்டால் திட்டமாக அவன் சுவனத்தின் பாதையை மறந்துவிட்டான். - ஹதீஸ்

6.என்மீது நீங்கள் ஸலவாத் சொல்வது தண்ணீர் நெருப்பை அணைத்து விடுவதை போல் உங்களுடைய பாவங்களை அழித்துவிடும்.- ஹதீஸ்

7.ஜும்ஆ உடைய நாளில் யார் நாற்பது தடவை என்மீது ஸலவாத் சொல்லுகிறாரோ அவருடைய நாற்பது வருடத்தின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது. - ஹதீஸ்

8.யார் என்மீது ஒரு தடவை ஸலவாத்சொல்லுகிறரோ அவருக்கு அல்லாஹ் நூறு விதமான தேவைகளை பூர்த்தி செய்கிறான். எழுபது தேவைகள் மறுமையிலும் மூப்பது தேவைகள் இவ்வுலகத்திலும் பூர்த்தி செய்கிறான். - ஹதீஸ்

PDF ISLAM

நபிமணியின் மீது உயிரை விட பிரியம் வைத்தல்:

எவர்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய ரசூலுக்கும் வழிப்பட்டு நடக்கிறார்களோ அவர்கள் மகத்தான வெற்றி யடைந்தவர்களாவர் என்று குர்ஆன் ஷரிபிலே அல்லாஹ் கூறியிருக்கின்றான். ஆகவே நாம் ஒவ்வொரு சமயத்திலும் நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களின் சுன்னத்துக்களைப் பின்பற்றியொழுகப் பழகிக்கொள்ள வேண்டும். அவர்களின் அன்பை நம் உயிரினும் மேலான நம் உள்ளத்தில் இடம் பெறச் செய்தல் வேண்டும். அவர்களின் திருநாமம் சொல்லப்படும் போதெல்லாம் அவர்கள் மீது ஸலவாத் கூற வேண்டும். உம்மு அம்மாரா என்ற அம்மையார் உஹது போர் முனையிலே நாயகத்தை வெட்ட வந்த இப்னுகைமா என்பவனைத் தடுத்து நிறுத்தி தன் வாளால் வெட்டினார்கள். ஆனால் அவன் இரும்பு கவசம் அணிந்திருந்ததால் அவனுக்கு காயம் ஏற்படவில்லை. அவன் தன் வாளினால் இந்த அம்மையாரை வெட்டினான் இந்த அம்மையாரின் தோள் புஜத்தில் பலத்த காய மேற்பட்டது . இது இந்த அம்மையார் நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) மீது வைத்திருந்த அன்பிற்கு சிறந்த எடுத்து காட்டாகும். உஹது யுத்தத்திலே நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்)

PDF ISLAM

ஷஹிதாக்கப் பட்டுவிட்டதாக ஒரு வதந்தி மதினமா நகரில் பரவியது. மதீனத்து பெண்கள் அலறி துடித்து வீட்டை விட்டு வெளியேறி போர்களம் நோக்கி விரைந்தனர். இதற்கிடையில் ஒரு அன்ஸாரி பெண் தன் சுய உணர்வற்று எதிர்பட்ட மனிதர்களிடம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நிலைமை என்ன? என்று உரத்த தொனியில் கேட்டார். மாறாக தந்தையும். மகனும். சகோதரனும். கணவனும் ஷஹிதாக்கப்பட்ட செய்தி தான் கிடைத்தது. இன்னாலில்லாஹிவ இன்னா இலைஹி ராஜி ஊன் என்று சொல்லி விட்டு போர்களம் முன்னேறினார். நபியின் நிலைமை என்ன? அதை சொல்ல மாட்டீர்களா? என்று மிக்க பரிதாபத்துடன் கேட்டார். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) பூரணசுகத்துடன் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த வித ஆபத்தும் இல்லை என்று கூறியும் நிம்மதி அடையாமல் நபி அவர்களை நேரில் கண்ட பின்னரே நிம்மதி பெரு மூச்சு விட்டார். அந்த மங்கையர் திலகம். இதல்லவோ அன்பு! அத்தகைய அன்பை ஒவ்வொரு இஸ்லாமிய ஆணும், பெண்ணும் தம் உள்ளத்தில் வளர்க்க வேண்டும். தன் உயிரை விட நேசிக்க வேண்டும். நபி நாயகம் காட்டிய வழிகளைப் பின்பற்றி என்ன துன்பம் வந்தாலும் அதனை ஏற்று வாழ்ந்து மடிய வேண்டும் . ஒரு பெண் அன்னை ஆயிஷா நாயகியிடம் சென்று .அன்னையே நான் நபி

PDF ISLAM

(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் புனித கப்ரை ஜியாரத்து செய்ய வேண்டும் என்றார். அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் ரௌளாவின் கதவை திறந்து விட்டார்கள். அந்த பெண் தேம்பி தேம்பி அழுது மூர்ச்சையாகி மௌனத்தாகி விட்டது. சுப்ஹானல்லாஹ் அந்த ஆத்மார்ந்த அன்புக்கு உலகில் வேறு எங்காகிலும் உதாரணம் காட்ட இயலுமா? அந்த பெருமை இஸ்லாத்திற்கு மட்டுமே உரியது.

நூரை முஹம்மதுவை அறிதல்

சிருஷ்டிகளுக்கெல்லாம் உறை விடமான நம் உயிரினும் மேலான கண்களின் கருவிழி கண்மணி ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மீது சகல விதமான ரஹ்மத்துகளும் உண்டவதாகவும்,

அவர்களுடைய காரணத்தினாலேயே இந்த பிரபஞ்சம் முழுவதும் இல்லாமையிலிருந்து பகிரங்கமான ஆலமே இம்கானாக உற்பத்தி செய்யப்பட்டு இருக்கிறது. இன்னும் அல்லாஹுத்த ஆலா உடைய லாஹிர், பாத்தின் சம்மந்தப்பட்ட விளக்கங்கள் அனைத்தும் வெளிப்படையாக தெரிய வந்தன.

நம் உயிரினும் மேலான நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மாண்புமிக்க நூருடைய ஹகீகத்தாகிறது பிரபஞ்சங்களில் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. இன்னும்

PDF ISLAM

அவர்களுடைய தாத் தானது உயர்தரமான எபாத்துகளின் உறை விடமாக அமைந்திருக்கிறது. அவைகளை அறிந்த பின் முஷ்ரிக்களும், காபிர்களும் மட்டும் அல்ல; முஃமின்களும் கூட நபிகள் பெருமானார் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களை அறிந்தவருமில்லை, உணர்ந்தவருமில்லை என்றே சொல்லுவார்கள். அறிந்தவன் அல்லாஹூத்த ஆலா ஒருவனே எம் பெருமானார் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் புனிதமான தாத்தானது விளக்கவோ விளங்கவோ முடியாததோர் நுட்பமாக இருக்கிறது. எனவே அவர்களின் ஹகீகத்து நூராகவும் அவர்களின் மகாம் நூராகவும் அவர்களின் திருநாமம் நூராகவும், அவர்களின் செயல்கள் நூராகவும் அமைந்திருக்கிறது. மண்ணாலான ஒருவன், அவர்களை அறிய முற்பட்டால் என்ன அறிய முடியும்? நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) ஓர் அபூர்வமான சிருஷ்டியாக இருக்கிறார்கள்.

படைத்தவனே அவர்களின் பேரில் பிரியம் கொண்டிருக்கிறான். நபிஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களை வர்ணிப்பதில் குர்ஆன் முழுவதும் அமைத்திருக்கிறது. நபி பெருமானார் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுக்காக இவ்வுலகம் தோற்றுவிக்கப்பட்டது. ஆகவே தான்

PDF ISLAM

நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆலங்களுக்கெல்லாம் ரஹ்மத்தாக அமைந்திருக்கிறார்கள். மேலும் கியாமத்தில் அவர்களுக்கு சொந்தமாக மகாமே மஹ்மூதும் அமைந்திருக்கிறது. மஹ்ஷர் மைதானத்தில் நபிமார்களின் பார்வையெல்லாம் அல்லாஹுத்த ஆலாவின் பொருத்தத்தை எதிர் பார்த்திருக்கும் ஆனால் அல்லாஹுத்த ஆலா தன்னுடைய நேசரான அருமை நபியவர்களைத் திருப்திப்படுத்தி வைப்பதில் திரு உள்ளங்கொண்டவனாக இருப்பான்.

எம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கியாமத்து நாளுடைய நிலைமையை எடுத்துரைக்கும் போது நான் ஸஜ்தாவில் சிரம் பணிந்தவனாக இருப்பேன். அப்போது இறைவன் என்னை நோக்கி என்னுடைய பிரிய நேசரே! ஹபீபே! ஸஜ்தாவிலிருந்து தலையை உயர்த்துங்கள். நீங்கள் சொல்லுங்கள் அங்கீகரிக்கப்படும். எது கேட்டாலும் தரப்படும். நீங்கள் யாரை விரும்பினாலும் அவர் மன்னிக்கப்படுவார் என்று திருவுளமாவான் என்பதாக கூறி விளக்கி இருக்கிறார்கள். அல்லாஹ்! அல்லாஹ்! எவ்வளவு அருமையான முறையில் தன்னுடைய ஹபீப் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது பிரியம் கொண்டுள்ளான். கேட்டதையெல்லாம் கொடுக்கிறான். சொன்னதையெல்லாம் கேட்கிறான்.

PDF ISLAM

நபிஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்கள் எப்படி உலக வாழ்வில் அல்லாஹ் உடைய எந்த உத்திரவையும் நிராகரிக்க வில்லையோ அப்படியே அல்லாஹ்வும் ஆகிரத்தில் நபி அவர்களின் ஒவ்வொரு விருப்பத்தையும் பூர்த்தி செய்கிறான். இத்திரை மறைவுக்குள் ஏதோ பரம ரகசிய மிருக்க வேண்டும். இப்படிப்பட்ட உன்னத ஸ்தானத்தில் உள்ள தூயவர்களை கேவலம் தன்னை பற்றிய அறிவாராய்வு கூட இல்லாத மண்ணுரு வாகிய மாந்தன் அந்த அல்லாஹ் வுடைய ஹபீபுகளின் அந்தஸ்துக்களை எங்ஙனமறிவான்? ஆனால் அவ்விறைவன் தன் கருணையினால் தன் திருச்சமூகத்தில் சற்றே இடம் தந்து தனது தாராளமான அருட்கொடைகளினால் சற்றே திரையை விலக்கி விடுவானேயானால் அப்போது ஒரு கால் நம் உயிரினும் மேலான நபிஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் அந்தஸ்த்தை ஓரளவு அறிந்து கொள்ள முடியும். அங்ஙனம் பாக்கியம் கிடைத்தால் அந்தக் காட்சிகளில் மனம் மயங்கி தன் உணர்விழந்து எதையும் சிந்திக்காமல் நபிஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் மீது பிரியம் கொண்டு யா அல்லாஹ்! எவர்களின் நூரிலிருந்து ஆயிரக் கணக்கான நூர்கள் உண்டாயிற்றோ அவர்கள் மீது கருணை புரிவாயாக என்று சொல்ல முற்படுகிறான். தனது உயிரில் வைக்கும் பிரியத்தை விட கண்மணி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) மீது தனது

உயிரை விட பாசம் வைக்க துடிக்கிறான். கனவிலும், நினைவிலும், பார்க்க ஏங்குகிறான். அல்லாஹ் அந்த பாக்கியத்தை நம்அனைவருக்கும் தந்தருள் புரிவானாக! ஆமின்!.

அண்ணலார் அகிலத்தின் பேரோளி

எந்த ஒருவன் அல்லாஹ்வுடைய நூர் ஆகிய முஹம்மது (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களைக் கொண்டு (நிஸ்பத்) தொடர்பை ஏற்படுத்திக் கொண்டானோ அவனைப் பற்றி என்ன சொல்வது. அவனுடைய கண்களில் அல்லாஹ்வுடைய நூர் சுருங்கச் சொன்னால் இருள்மயமாக இருந்த அவன் அண்ணல் நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களைக் கொண்டு நூருடைய மல்ஹராக ஆகிவிட்டான்.

அல்லாஹ்வுடைய தாத்து முற்றிலும் நூர் ஆகும். முஹம்மது (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களுடைய தாத்து நூர் ஆகும். திருக்குர் ஆனும் நூர் ஆகும்.ஹகீகத்தை அறியாத சிலர் அல்லாஹ்வுடைய தாத்தும் நபி. (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களுடைய தாத்தும். நூர் ஆக இருந்தால் ஷிர்க் ஆகிவிடும் என்று எண்ணக் கூடாது. காரணம் இரண்டு தாத்தும் நூர் தான் என்பது நமது கற்பனையாக இருந்தால் உண்மையில் ஷிர்க்தான் ஆனால் அல்லாஹ் சொன்னதாக இருந்தால் ஷிர்க் ஆகாது.

தெளஹீது ஆகத்தான் இருக்கும். அல்லாஹ் தனது திருமறையில் உங்களிடம் அல்லாஹ்வுடைய புறத்திலிருந்து தீட்ட வட்டமாக நூர் வந்திருக்கிறது. துலாம்பரமான கிதாபும் வந்திருக்கிறது என்று தெளிவுபடுத்தியிருக்கிறான். இந்த இடத்தில் குறுகிய மனப் பான்மையுடைய சிலர் நூரைக் கொண்டு ஹிதாயத் என்று நாட்டம் (முராத்) செய்கிறார்கள். அவர்களுக்கு தெரிய வேண்டும். அதாவது அல்லாஹ்த்தஆலா தனது திருமறையை முற்றிலும் ஹிதாயத் என்று சொன்னான் அதாவது (ஹிதன்லில் முத்தகீன்) இந்த கிதாபு முத்தகீன்களுக்கு நேர்வழியாய் இருக்கும் என்று சொல்லியிருக்கிறான்.. இந்த திரு வசனத்தில் கிதாபும் முபீன் என்று தெளிவு படுத்தப்பட்டு இருக்க நூர் என்பதைக் கொண்டு ஹிதாயத்தை நாட்டம் (முராத்) செய்வது எந்த அடிப்படையில்,

முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நூர் என்று சொல்லுவதால் ஷிர்க்ஆகிவிடும் என்றால் அருமை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களே அல்லாஹ்விடத்தில் தங்களை நூர் ஆக ஆக்கிவிடும்படி துஆகேட்டார்களோ என்ன? அதனால் தங்களை அல்லாஹ்வாக ஆக்கிவிடும் படி துஆ கேட்டார்களா? இல்லவே இல்லை. என்னுடைய தாயும்,தகப்பனும் , ஈமானும், அருமை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

PDF ISLAM

அவர்களுக்கு அர்ப்பணம் ஆகட்டும். யா அல்லாஹ் என்னுடைய கல்பிலும் நூரைக் கொடு என்னுடைய கேள்விகளில் நூரைக் கொடு. என்னுடைய பார்வையில் நூரைக் கொடு எனக்கு முன்னாலும் பின்னாலும் நூரைக்கொடு எனக்கு மேலும் கீழும் நூரைக் கொடு. என்னை நூராக ஆக்கிவிடு என்று துஆ கேட்டிருக்கிறார்கள். இந்த ஹதீஸ் (முத்தஃபிக் அலைஹி) ஆகும். ளாஹிர் உடைய உமாக்களும் மற்றும் இல்ம் உடையவர்களும் குழப்பமடைவதற்கு பகரமாக யாராகிலும் பார்வை உடைய (பாகபர்) அறிந்தவரிடம் கேட்டு தெரிந்து கொண்டால் நூர் உடைய ஹகீகத்தை தெரிந்த கொள்ள முடியும்.

அல்லாஹுத்தஆலா தன்னுடைய தாத்தை நூர் என்று சொன்னான். முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நூர் என்று சொன்னான். திருக்குர் ஆனையும் நூர் என்று சொன்னான். மேலும் தன்னை வானங்கள் பூமிகளுடைய நூர் என்றும் சொல்லியிருக்கிறான்.

திருமறை நம் முன்னிலையில் சமர்ப்பிக்கப் பட்டிருப்பதால் அதில் நாம் தஃபக்குரும். ததப்பரும் செய்யவேண்டும். நிராகரிக்கக்கூடாது. ஆச்சரியப்பட்டு ஒதுங்கி விடுவதால் தரஜாத்துகளில் குறைவு ஏற்படும். ஹகீகத் சம்பந்தப்பட்ட வகையில் நிராகரிப்பட்டது இருந்தால் குஃபர் ஏற்படும். இங்கு ஒரு முக்கிய விஷயத்தை கவனத்தில் இறுத்திக் கொள்ள வேண்டும்.

PDF ISLAM

அதாவது முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) நூராக இருந்தும் அடிமையாகத்தான் இருக்கிறார்கள். அல்லாஹ்வாக ஆகிவிடவில்லை. ஷாஹிர் பாத்தின் இரண்டு அடிப்படையிலும் சரிதான். மேலே சொல்லப்பட்ட ஆயத்துகளைத் தப்பாக தஃவீல் செய்து யாராகினும் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை அல்லாஹ் என்று சொன்னால் அவன் குஃப்ர் செய்தான். அவனுடைய இருப்பிடம் நரகமாகும்.

முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அல்லாஹ் அல்ல. அல்லாஹ்வை வெளிப் படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஹகீகத்தை அறியாதவர்களுக்கு வெளிப்படுத்தும் வஸ்த்துக்களில் அசலுடைய ஏமாற்றம் ஏற்பட்டுவிடுகிறது. எப்படி யெனில் இரும்பை நெருப்பிலிட்டு காய்ச்சப்பட்டால் அந்த இரும்பு, நெருப்புடைய சகவாசத்தால் நெருப்பின் நிறத்தையடைந்து நெருப்பாகவே காட்சியளிக்கிறது என்றாலும் ஹகீகத்தில் நெருப்பு அல்ல, அந்த நேரம் இரும்பை நெருப்பென்று விளங்குவதற்கு விளக்கக் குறைவுதான் காரணமாகும். ஹகீகத்தில் இரும்பு, இரும்பாகத் தான் இருக்கிறது. நெருப்புநெருப்பாகத்தான் இருக்கிறது. இரும்புடைய தாத்துக்கு எந்த சம்பந்தமும் இல்லை. அல்லாஹ் நூர், முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) நூர் குர் ஆன் நூர் இதற்கு

PDF ISLAM

விளக்கமும் வியாக்கியானமும் செய்வதற்கு சந்தர்ப்ப மில்லை. காரணம் கிதாபு நீண்டு விடும் என்பதை நினைத்து இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

மண்ணுலகில் அண்ணலாரின் அதிகாரம்:

நபிஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களும், ஹஜ்ரத் அபூபக்கர் சித்திக் (ரலி) அவர்களும் மதீனமா நகர் நோக்கி ஹிஜ்ரத் சென்ற போது முஹம்மது உடைய தலையைக் கொண்டு வருகிறவர்களுக்கு நூறு உயர்ரகத்தை சார்ந்த ஒட்டகம் பரிசு அளிக்கப்படும் என்று அபூலஹப் பறை சாற்றியதின் மீது பேராசை கொண்டு, சுராக்கா என்பவர் பின் தொடருகிறார். அவர் தீய எண்ணத்தின் அடிப் படையில் மிக வேகமாக வந்து கொண்டிருக்கிறார் என்பதையறிந்த நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் பூமிக்கு ஆணையிடுகிறார்கள். யா! அர்லுகுதீஹி... பூமியே அவனை பிடித்துக் கொள் என்று, அவ்வளவு தான் அவரது குதிரையின் இரு மூட்டுக்கள் வரையும் பூமிக்குள் புகுந்து விட்டன. இந்த விபரீதத்தை கண்ணுற்ற சுராக்கா மாநபியிடம் மன்றாடி மன்னிப்புக் கோரி நின்றார். மாநபியும் இரக்கம் கொண்டு பூமியே அவரை விட்டு விடு என ஆணை யிட்டார்கள். பூமியும் அவரை விடுவித்தது. இந்த சம்பவம் நமக்கு தெரிந்த ஒன்றுதான் இந்த இடத்தில் நாம் கவனிக்க வேண்டியது, மாநபியின் உத்தரவுக்கு பூமி கீழ்படிந்து செயலாற்றியது என்பது தான். வேறு

PDF ISLAM

எந்த நபிக்கும் இத்தகைய தனி சிறப்புகள் இல்லை. நமது கண்மணி நபி மணிக்கு மட்டுமே மண்ணுலகில் அதிகாரம் செலுத்த முடியும் என்பது புரிகிறது.

விண்ணகத்தில் அண்ணலாரின் அதிகாரம்

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை சூன்யக்காரர் பெரிய மந்திரவாதி யாரோ ஒரு ஜின் செய்திகளை சொல்லிக் கொடுத்து செல்கிறது. என்று காபிர்கள் அவதூறு கூறினார்கள். எல்லா விதத்திலும் முஹம்மதுவை பொய்யர் என அம்பலப் படுத்திட வேண்டுமென்று பிடிவாதமாக இருந்த அவர்கள் கூடி ஆலோசனை செய்கிறார்கள். மந்திரவாதிகளின் மாயாஜால வித்தைகள் மண்ணுலகில் செல்லுபடியாகும் விண்ணுலகில் பலிக்காது என எண்ணி சந்திரனை இரு துண்டுகளாக பிளந்து காட்ட சொன்னார்கள். நபிமணியவர்கள் சற்றும் யோசிக்காமல் தங்களின் முபாரக்கான ஆள்காட்டி விரலால் சந்திரனை நோக்கி சாடை செய்ய அது இரு கூறுகளாகி ஹிரா மலைக்கு இரு புறங்களிலுமாக பிரிந்து நின்றன. இது விண்ணகத்தில் அண்ணலாருக்கு உள்ள அதிகாரத்தை காட்டுகிறது. வேறு எந்த நபிமார்களுக்கும் இத்தகைய அதிகாரம் கொடுக்கப்படவில்லை. விண்ணுலகப் பயணம் (மிஃராஜ்) சென்ற நபிமணியவர்கள் நேருக்கு நேராக இறைதரிசனத்தை யடைந்து பல காட்சிகளையும் கண்டுகளித்து ஹீரூல்ஈன் என்னும் கண்ணழகிகளின் கூட்டத்தை காணும் போது இது எனது

PDF ISLAM

நண்பர் அபூபக்கருக்கு! இது உமருக்கு! இது உஸ்மானுக்கு! இது அலிக்கு என்று ஒவ்வோரு ஹுரூல் ஈன்களை தமது உற்ற ஸஹாபா பெருமக்களுக்கு பங்கீடு செய்து விட்டு ஹுரூல் ஈன்களின் தலைவியை பார்த்துச் சொன்னார்கள். நீ எனது கருப்பு பிலாலுக்கு! என்று. ஹுரூல் ஈன்களின் தலைவி சொன்னதாம் யாரசூலுல்லாஹ்! மற்ற ஹுரூல் ஈன்களை தங்களின் நெருங்கிய தோழர்களுக்கு பங்கீடு செய்து விட்டு என்னை மட்டும் கருப்பு அடிமை பிலாலுக்கு என்று ஜோடி சேர்க்கின்றீர்களே! என்றதும் அதற்கு நபி அவர்கள் கூறினார்கள் ஏ! ஹுரூல் ஈன்களின் தலைவியே! நீ எனது பிலாலின் நிறத்தை பார்க்கின்றாய். நான் எனது பிலாலின் ஈமானை பார்க்கின்றேன் என்று நபி மணியவர்கள் பதில் கூறினார்கள் என்று எங்களது சச்சாபீர் அல்லாமா ஆரிபுபில்லாஹ் பைஜி ஷாஹ் நூரீ சர்க்கார் கிப்லா அவர்கள் ஈமானின் படித்தரங்கள் என்ற பாடம் நடத்தும் போது சொன்னார்கள் விண்ணகத்தில் பங்கீடு செய்யும் அதிகாரம் வேறு எந்த நபிமார்களுக்கும் கிடையாது. அத்தகைய பாக்கியம் நமது கண்மணி நபிமணிய வர்களுக்கே உரியது. (இன்னமா அனகாஸிம் வல்லாஹு யுஃதி) அல்லாஹ் கொடுக்கக் கூடியவனாய் இருக்கின்றான். நான் பங்கீடு செய்பவனாக இருக்கின்றேன் என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறுகின்றார்கள்.

PDF ISLAM

எப்பேர்பட்ட பாக்கியத்தை அடைந்த நபிகள் உம்மத்தாக நாம் இருப்பது எவ்வளவு பெருமையாக இருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நபிமார்களுக்கு ஏற்பட்ட சோதனைகளில் ஆயிரத்தில் ஒரு பங்கு சோதனை நமக்கு ஏற்பட்டால் நாம் தாங்கிக் கொள்ள முடியாது. (அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!) மேலும் நாம் அனைவரும் ஆதம் (அலை) நமது தந்தையிலிருந்தும் அன்னை ஹவ்வா (அலை) அவர்களிலிருந்தும் படைக்கப்பட்டவர்கள். உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் எனது பரம்பரையிலிருந்து படைக்கப் பட்டவனே என்று நபிமணி கூறுகிறார்கள். ஆனால் நாம் நபிமார்களை நம்மை போன்ற சாதாரண மனிதனைப்போல் ஒப்பிட்டு பேசுகிறோம். இது நமது அறியாமையாகும். ஒரு கத்தே நூரே முஹம்மதிய்யாவை நம்மால் விளங்கவும் முடியாது. புரியவும் முடியாது. தொழுகையுடைய படித்தரங்களுள் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தால் நபி (அல்லாஹுஹு அலைஹி வஸல்லம்) அவர்களைத் தவிர வேறுயாரும் அல்லாஹ் அடைந்த படித்தரத்தை எத்தவில்லை. மூஸா (அலைஹிஸ்ஸலாம்) உருல்அஸ்ம் என்ற படித்தரம் பெற்ற நபியாக இருந்தும் இறைவனுடன் பேசிய கலீமுல்லாஹ் என்ற பெயர் பெற்றிருந்தும் அவருடைய வெளிப்பாட்டை காணும் தேட்டமுடையவர்களாகவே இருந்தார்கள். رَبِّ أَرِنِي (ரப்பி அரினீ அன்ளுர் இலைக்க. எனை என் தாயாளே எனக்கென்றும் இலங்குமே .....

(குர்ஆன் ஆயத்:143)

PDF ISLAM

என்னுடைய இறைவனே! நான் உன்னை பார்க்க வேண்டும். எனக்கு உன்னை காண்பிப்பாயாக! என்று அவர் கேட்டார். என்னை உறுதியாக நீர் பார்க்க (சக்திபெற) வே மாட்டீர் எனினும் இந்த மலையைப் பார்ப்பீராக! அதனுடைய இடத்தில் அது நிலைத் திருந்தால் பிறகு என்னை நீர் பார்க்கலாம் என்று அவன் (அல்லாஹ்) கூறினான். ஆகவே அவருடைய இறைவன் அம்மலை மீது தன் பேரொளியைத் தோற்றுவித்தபோது அ(ப்பேரொளியான)து அதை (அம்மலையை)த் தூள் தூளாக்கி விட்டது மூசா மூர்ச்சையாகிக் கீழே விழுந்து விட்டார். பிறகு அவர் (மூர்ச்சை) தெளிந்த பொழுது (யா அல்லாஹ்) நீமகா தூயவன் நான் உன்பால் பாவ மன்னிப்புக்கோரி மீண்டுவிட்டேன்; நான் (உன்னை) நம்பிக்கை கொண்டவர்களில் முதன்மையானவன் என்று அவர் கூறினார் (குர் ஆன் ஆயத் 9:143) என்று தனது திருமறையில் அல்லாஹ் (ஜல்ல ஜலாலஹு) கூறுகின்றான். ஆனால் நமது நபிமணி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களோ, மூசா (அலை) அவர்கள் கேட்டது போன்று ஒரு தடவையும் கேட்கவில்லை. மற்ற நபிமார்கள் அல்லாஹ்வின் தரிசனத்தை தேடினார்கள். ஆனால் நமது நபிமணியவர்கள் எல்லா வல்லுக்களிலும் ஹக்கையே காணக்கூடிய அந்தஸ்தை பெற்றிருந்தார்கள். ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு காரியத்திலும் இறைவனை பார்த்துக் கொண்டே இருங்கள். அவனைப்பெற்றுக் கொண்டே இருங்கள்! என்று கூறினார்கள். இப்போது

PDF ISLAM

சொல்லுங்கள் எனது இனிமையான சமுதாய சான்றோர்களே! ஏன் நமது நபிமணிக்கு மீலாது விழா எடுக்கக்கூடாது என்று!! புகழ்பாக்கள் பாடக்கூடாதென்று!! நெஞ்சம் இருக்கும் வரை நபியை நினைப்போம் நாவு இருக்கும் வரை வானளாவ புகழுவோம்! ஸலவாத் ஓதுவோம். கண் இருக்கும் வரை நபியைத் தேடுவோம், உயிர் மூச்சு உள்ளவரை நபியின் வழிமுறையை பேணி பாதுகாப்போம். அல்லாஹ் அருள் புரிவானாக! ஆமின்!

பெருமானாரின் தோற்றம் பெரும் அற்புதம்:

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஜனனத்தைப் பற்றி நபி மார்கள் நன்மாராயம் கூறினார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பொருட்டால் நபிமார்களின் துஆக்கள் அங்கீகரிக்கப்பட்டன.

ஹவ்வா (அலை) அவர்களுடைய மஹருக்காக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பேரில் சலவாத்து சொல்லுவதென்று நிர்ணயிக்கப்பட்டது.

அர்ஷின் மீது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் திருநாமம் எழுதப்பட்டிருந்தது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறந்த காரணத்தினால் தான் ஈரான் தேசத்து நெருப்புக் கிடங்கு அணைந்து போயிற்று.

கிஸ்ரா வுடைய மாளிகையின் கலசங்கள் விழுந்து விட்டன. சாவா விலுள்ள ஏரிவற்றி விட்டன.

மக்காவில் உள்ள விக்கிரகங்கள் தலை குப்புற விழுந்து விட்டன.

நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறந்தவுடன் தரை, கடல், வானம், பூமி ஆக எல்லா ஆலங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் ஜனனமாகும் போது மலாயிகத்துமார்கள் அணி வகுத்து நின்றார்கள்.

நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒளிவான ஆடையால் மறைக்கப்பட்ட வர்களாக ஜனனமானார்கள்.

நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறக்கும் போது அசுத்தத்திற்கு பகரமாக ஒளியை (நூரை)த் தங்களுடன் கொண்டு வந்தார்கள். அதனால் ஆலங்கள் அனைத்தும் ஒளிவு மயமாகி விட்டது.

நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறந்த போது மலாயிகத்துமார்கள் ஜம் ஜம் தண்ணீரை ஜம்ரத் உடைய தங்க பாத்திரத்தில் கொண்டு வந்து குளிப்பாட்டினார்கள். இறுதி நபித்துவ முத்திரை பதிக்கப் பெற்று பிறந்தார்கள். நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறந்த போது நட்சத்திரங்கள் பூமியை நோக்கி வந்தன.

PDF ISLAM

பார்ப்பவர் களுக்கு எங்கே தன் மீது விழுந்து விடுமோ என்ற சந்தேகமேற்பட்டது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பொருட்டால் வளர்ப்பு தாயான ஹலீமா (ரலி) அவர்களின் ஆடுகளிலும் ஒட்டகைகளிலும் வற்றிப்போன பால் மீண்டும் சுரக்க ஆரம்பித்து விட்டது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் தொட்டிலை மலாயிகத்துமார்கள் ஆட்டிக் கொண்டிருந்தார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நெஞ்சை சிறு பிராயத்தில் மலாயிகத்து மார்கள் கழுவி இல்மையும் ஹிக்மத்தையும் நிரப்பி விட்டார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வியர்வை கஸ்தூரியை விடவும் பன்னீரை விடவும் அதிக மணமுள்ளதாக இருந்தது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை நொடிப்பொழுதில் அர்ஷுக்கும் அதற்கப்பாலும் அழைத்துக் காண்பிக்கப்பட்டது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு மிஃராஜில் தங்கள் ரப்பிடம் பிரத்தியோகமான சந்திப்பும் உரையாடலுமிருந்தது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை எல்லா நபிமார்களும் ரஸூல்மார்களும் தங்களின் இமாமாகவும் அதிபதியாகவும் ஒப்புக் கொண்டார்கள். ஹஜ்ரத் ஜிப்ரயீல் (அலை)

PDF ISLAM

சொன்னார்கள்: கிழக்கு திசைகளிலும் மேற்கு திசைகளிலும் சுற்றினேன்! நபி முஹம்மது (ஸல்) அவர்களைக் காண மேலானவர்களை நான் காணவில்லை.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மகத்துவத்தைப்பற்றி கற்களும் சாட்சி பகர்ந்தன.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் (இஷாரா) சைக்கினையைக் கொண்டு சந்திரன் பிளந்து விட்டது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு காட்டுப் பறவைகளும் தலை சாய்த்தன.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பிரிவால் ஏற்பட்ட துக்கத்தில் அவர்கள் பிரசங்கம் செய்யும் போது மிம்பர் கட்டப்படுவதற்கு முன் உபயோகித்து வந்த பேரீத்தக் கட்டை (சுதூனாஹுனானா) அழுதது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது மேகம் நிழலிட்டுக் கொண்டிருந்தது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் விரோதிகளுக்குக் கார்மானம் கொடுத்தார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தங்களை ஏசியவர்களுக்காக துஆ செய்தார்கள். கியாம நாளில் அனைவரும் தத்தமக்குச் செய்யப்படும் தீர்ப்பின் பேரில் சந்தோஷப்படுவார்கள். ஆனால் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

PDF ISLAM

அவர்கள் உம்மத்துக்குச் செய்யப்படும் நல்ல தீர்ப்பின் பேரில் சந்தோஷப்படுவார்கள்.

கியாமநாளில் எல்லோரும் தாகத்துடனிருப் பார்கள், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தண்ணீர் புகட்டுவார்கள். பாவிகள் எரிந்து கொண்டிருப்பார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பாவிகளை அதினின்று விடுவித்துக் கொண்டிருப்பார்கள்.

கியாம நாளில் எல்லோரும் தன்னைத்தான் காப்பாற்றும் முயற்சிகளில் இருப்பார்கள் . நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அனைவரையும் காப்பாற்றுவார்கள்.

தொழுகைகளில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய கூபகார்த்தமிருக்கின்றது.

துஆக்களில் நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய 'வஸீலா' இருக்கிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு ஸலாம்அனுப்புவது கொண்டு அல்லாஹ் சந்தோஷப்படுகின்றான்.

மேலும், சலாம் சொல்லக்கூடியவர்களின் மீது பத்து பங்கு அதிகமாக ரஹ்மத்தை இறக்கி வைக்கப் படுகின்றன. அவரை அல்லாஹ் மன்னித்தும் விடுகின்றான்.

கியாம நாளில் "ஸஜ்தாக்கள்" உம்மத்து அடங்கலையும் மன்னிக்கக் காரணமாகி விடும்.

PDF ISLAM

கியாம நாளில் "லிவாவுல் ஹம்து" என்ற கொடி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கைவசமிருக்கும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பிறருக்காகப் பரிந்து பேசும் அந்தஸ்த்தில் தரிப்பட்டிருப்பார்கள்.

கியாம நாளுடைய மைதானம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கைவசமிருக்கும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ரவ்ளா ஜியாரத்து மன்னிப்புக்கு வஸீலாவாகயிருக்கிறது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தங்களுடைய முபாரக்கான ரவ்ளாவின் அருகில் வந்து சொல்லக் கூடியவர்களின் சலவாத்துகளைத் தாங்களே கேட்கிறார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை அல்லாஹு தஆலா "நூர்" என்று சொன்னான். அகில உலகத்தின் ரஹ்மத் என்று சொன்னான் காத்தமுன் நபி என்று சொன்னான்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பின்பற்றியவர்கள் மன்னிக்கப்பட்டார்கள். நபி(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை "ரஹீம்" என்று சொன்னான். அல்லாஹு தஆலா நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கையை தன்னுடைய கையெனக் கூறினான்.

PDF ISLAM

அவர்களின் செயலை தன்னுடைய செயலென்று சொல்லி நபியவர்களின் புகழை மேலோங்கச் செய்தான்.

அல்லாஹ் தஆலா நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு தன்னுடைய பெயரைக் கொடுத்தான். அவர்களின் விருப்பத்தின் பேரில் கிப்லாவை மாற்றினான்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் உம்மத்துக்கு ஏனைய உம்மத்துக்களை விட உயர் பதவியளித்தான்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய உம்மத்திற்கு சுவர்க்கத்தில் பிரவேசிக்காத வரை அனைவர் மீதும் சுவனத்தை ஹராமாக்கி விட்டான்

.நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய உம்மத்தில் பிறப்பதற்காக நபிமார்கள் "துஆ" செய்து கொண்டிருந்தார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நூரின் பொருட்டால் ஆதம் (அலை) அவர்களின் "துஆ" அங்கீகரிக்கப்பட்டது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நூரின் காரணத்தால் நூஹ் (அலை) அவர்களுடைய கப்பல் கரை சேர்ந்தது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நூரின் காரணத்தால் ஹஜ்ரத் இப்ராஹிம் (அலை) அவர்களை எரிக்க நெருப்பு சக்தி பெறவில்லை.

PDF ISLAM

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நூரின் காரணத்தால் ஹஜ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்கள் அறுபட முடியவில்லை

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தங்களுடைய மௌலாவை அந்தரங்க மாகவும் பகிரங்கமாகவும் ஷுஹூது செய்து கொண்டிருந்தார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்த பின்னரும், ஜீவித்திருக்கின்றார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஜீவிதம் அல்லாஹ்வின் பாதையில் உயிர்நீத்த சஹாபாக்களுடைய சுஹதாக்களுடைய ஜீவியத்தை விட உயர்ந்ததாக யிருக்கின்றது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் சமூகத்தில் பிரதி வாரமும் உம்மத்துடைய அமல்கள் சமர்ப்பிக்கப் படுகின்றன.

உம்மத்துக்களின் நல் அமல்களைப் பார்த்து சந்தோஷமடைந்து இறைவனுக்கு சுக்ர் செய்கிறார்கள். தீய அமல்களை பார்த்து பாவ மன்னிப்பு தேடுகிறார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அகழ்வெட்டும் ஆயுதத்தால் கல்லை உடைத்தார்கள். அதனால் ஏற்பட்ட வெளிச்சம் எமன், ஷாம் முதலிய தேசங்களின் வெற்றியைக் காட்டியது.

PDF ISLAM

"வஃமு அன்ன பீகும் ரஸுஸல்லாஹ்" - ரஸுல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உங்களில் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். -(குர்ஆன்)

நபியவர்களுக்கே மீலாது !

மீலாது விழா - கொண்டாடப்படும் தகுதி நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கே உரியது. இவ்வுலகில் ஒரு லட்சத்து எண்பதினாயிரம் நபிமார்கள் வந்தார்கள். அவர்கள் யாருடைய மீலாதும் - பிறந்த நாளும் கொண்டாடப் படுவதில்லை அடுத்து ஸஹாபாக்கள், தாபிஈன்கள், தபஅதாபிஈன்கள் இமாம்கள், வலிமார்கள் -எவருடைய மீலாதும் கொண்டாடப்படுவதில்லை. இவ்வுலகில் வந்த எவரும் போய்தான் தீர வேண்டும். ஆதம் (அலை) முதற்கொண்டு ஈஸா (அலை) வரை நபிமார்களும், ரஸுல்மார்களும் வந்து சென்றுவிட்டார்கள். அவர்களின் நபித்துவமும் முடிந்துவிட்டது ஆனால் நமது நாயகமோ போவதற்காக வரவில்லை; நிலையாக இருக்கவே வந்தார்கள். அவர்களுடைய நபித்துவம் நிலையானது எனவே அவர்களின் மீலாது - பிறந்த நாளே கொண்டாடத் தகுதி வாய்ந்தது. அவர்களின் சன் மார்க்கம் அழியாமல் நிலைத்திருப்பதே அவர்களின் ஜீவியத்திற்கு (ஹயாத்திற்கு) ஆதாரமாகும். மீலாது என்றால் பிறப்பது. நமது நபியவர்களின் பிறப்பின் மகத்துவத்தை உள்ளது உள்ளபடி விளங்க முடியாது. நமது நபியவர்களின் பிறப்பே அனாதியானது.

PDF ISLAM

(மேரா நபி பைதா பி ஹுவே அவ்ர் பர்தாபி கீயே.)

நபியின்றி நேர்வழி இல்லை !

நான் உங்களுக்கு குர் ஆனை விளக்க வரவில்லை. ஹதீஸை விளக்க வரவில்லை; தீனைப் பற்றி கூற வரவில்லை. மாறாக இதற்கெல்லாம் மூல காரணமாகிய நபியவர்களைப் பற்றி நினை வூட்டவே வந்தேன்.

குர்ஆன் மட்டும் நமக்கு நேர்வழி (ஹிதாயத்) காட்ட முடியாது என்பது என் நம்பிக்கை குர்ஆனில் தொழும் படி ஏவப்பட்டுள்ளது. ஆனால் எப்படித் தொழுவது என்பதை நபியவர்களே காட்டினார்கள். அதில் ஜக்காத்தைப்பற்றி உத்தரவு இருக்கிறது. அதை எவ்வாறு கொடுக்க வேண்டு மென்று நபியவர்களே எடுத்துக் கூறினார்கள் குர்ஆனில் ஹஜ்ஜு செய்வதைப் பற்றி வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் யார் எப்படி ஹஜ்ஜு செய்ய வேண்டும் என்பதை நபியவர்களே போதித்தார்கள். ஆக நபியவர்களின்றி குர்ஆன் விளங்க முடியாத புதிராகவே இருக்கும்.

நபியவர்கள் காலத்தைக் கடந்தவர்கள் !

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? அவர்கள் மக்காவில் பிறந்து, மதீனாவில் மறைந்தார்கள் என்பது சாதாரண பொது மக்களின் விளக்கம். உண்மையில் அவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்பதை விளக்கிங்கொண்டால் எல்லோரும் உண்மை முஸ்லீம்களாக ஆகி விடுவார்கள். எங்கே என்ற கேள்வியுடன் நமக்கு வேறு பல கேள்விகளும் எழலாம். அவர்கள் யார்? எப்படி இருந்தார்கள்?

PDF ISLAM

எப்போது இருந்தார்கள்? போன்ற கேள்விகள் எழலாம். எப்படி ? என்ற கேள்விக்கு இப்படி என்று சொல்ல நாம் உதாரணத்தைத் தேட வேண்டி வரும். ஆனால் அவர்களுக்கு உதாரணமே இல்லை. எப்படி அல்லாஹ்வுக்கு உதாரணம், இணை இல்லையோ அப்படியே நபியவர்களுக்கும் உதாரணமோ, இணையோ இல்லை. எப்போது என்ற கேள்விக்கு சென்ற காலத்தைக் காட்ட வேண்டிவரும். உண்மையில் அவர்கள் யார்? எங்கே , எப்படி, இருக்கிறார்கள்? என்பதை விளங்க அல்லாஹ் நல்லருள் (தௌபீக்) செய்வானாக !

நபியவர்கள் உயிருடன் (ஹயாத்தாக) இருக்கிறார்கள் என்றவுடன், எங்கே இருக்கிறார்கள்? என்பது தான் நமது சிந்தையில் எழுகிறது. எந்த வஸ்துவையும் தேடுபவர்கள் அது எங்கிருக்கிறது என்று குறிப்பிட்ட இடங்களின் தான் தேடுகிறார்கள். இந்த நினைவு நமக்கு நபியவர்கள் மக்காவில் ஆமினா அவர்களின் வயிற்றில் ஜனித்தார்கள் என்பதை நினைவுக்கு கொண்டு வருகிறது. இது அவர்களின் புனித உடல் சம்பந்தப் பட்டவரைதான், ஆனால் நபியவர்கள் காலத்தையும், இடத்தையும், கடந்தவர்கள். ஹஸ்ரத் ஆதம் (அலை) மண்ணுக்கும், நீருக்கும் இடையில் இருக்கும் போதே

PDF ISLAM

(படைக்கப்படுவதற்கு முன்பிருந்தே) நான் நபியாக இருக்கிறேன். - என்ற நபியவர்களின் திருவாக்கே இதற்கு சான்று.

நபியவர்கள் முடிந்து விடுவார்களா ?

ஒரு மனிதரைப் பற்றி குறிப்பிடும்போது அவர் யார், எப்படிப் பட்டவர் என்று காட்டுவதற்கு அவர் மனிதர் என்றும், உங்களைப் போன்றவர் தாம் என்றும் கூறுவது அவரைப்பற்றி விளங்க போது மானதாக ஆகாது. அவரைப் பற்றிய வேறு அடையாளங் களையும் காட்ட வேண்டும். ஒரு சாதாரண மனிதரின் நிலையே இவ்வாறு இருக்க, அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாக வந்த மனிதர்களின் சிரேஷ்டரான நபியவர்களைப் பற்றி எப்படி எளிதில் விளங்க முடியும்? மற்றவர்களைப் போல் நபியவர்கள் வந்து போனவர்கள் அல்லர்! வந்து நிலைத்துவிட்டவர்கள். வந்து போய் விட்டார்கள் என்று கருதுவது மாபெரும் குருட்டுத்தனம்.

உலகில் வஸ்துக்கள் வருகின்றன, போகின்றன. ஆனால் முடிந்து விடுவதில்லை. உதாரணமாக இரவு, பகல், வருகின்றன, போகின்றன. சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள், தோன்றித் தோன்றி மறைகின்றன. இன்னும் பருவ காலங்கள் மாதங்கள் மாறி மாறி வருகின்றன; முடிவடைவதில்லை. மனித இனமும் தோன்றிக்கொண்டே யிருக்கின்றது; முற்றுப் பெறுவதில்லை. உலகும்

PDF ISLAM

அவற்றிலுள்ளவைகளும் இவ்வாறு இருக்க, இவை எல்லா வற்றிற்கும் காரண கர்த்தாவான நபியவர்கள் எப்படி முடிந்து விடுவார்கள்? இதை விளங்குவதற்கு உள்ளங்கள் திறக்க வேண்டும்.

நபியவர்கள் தீன்-சன்மார்க்கம் பரிபூரணமான பிறகே மறைந்தார்கள். எங்கே மறைந்தார்கள் என்பதைத்தான் விளங்க வேண்டும்.

திருமறையின் தன்மை

திருக்குர்ஆனை மனனம் செய்யும் ஹாபிஸ்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வரை குர் ஆனைப் பார்த்து ஓதி, மனனம் செய்கிறார்கள். மனனம் ஆன பிறகு குர்ஆன் அவர்கள் உள்ளத்தில் வந்துவிடுகிறது. பின்னர் அவர்களுக்கு முன்னால் குர்ஆன் தேவைப் படுவதில்லை. வெளியில் இருக்கும் குர்ஆன் ஹாபிஸ்களின் உள்ளங்களில் (வேறு விதத்தில்) மறைந்து விடுகிறது. எத்தனை உள்ளங்கள் குர்ஆனை மனப்பாடம் செய்தனவோ, அவர்கள் எல்லோருடைய உள்ளங்களிலும் குர்ஆன் பதிந்து விடுகிறது. குர்ஆனுக்கு இந்த தன்மை (கமால்) இருக்கும் போது, குர்ஆனைக் கொண்டு வந்த (ஸாஹிபே குர்ஆன்) நபியவர்களுக்கு எத்தகைய தனித்தன்மை இருக்கும்?

PDF ISLAM

நபியவர்களின் கப்ரு - ஸஹாபாக்களின் இதயங்கள் !

நபியவர்கள் ஸஹாபாக்களைப்பக்குவ நிலைக்கு ஆளாக்கியவுடன் ஸஹா பாக்களுக்குள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வந்து விட்டார்கள். ஹஸரத் அபூபக்கர், உமர், உஸ்மான் அலி (ரலி) மற்றும் ஸஹாபாக்கள் அனைவரிடமும் நபியவர்கள் வந்து விட்டார்கள். ஸஹாபாக்களின் உள்ளங்களில் நிறைந்து விட்டார்கள் இப்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஒன்றல்ல இலட்சக் கணக்காகி இருக்கிறார்கள். இவ்வாறு நபியவர்கள் ஸஹாபாக்கள் தாபிஈன்கள், தப அதாபிஈன்கள் இமாம்கள், அவ்லியாக்கள் வாயிலாக வந்து கொண்டேயிருக்கிறார்கள்.

இருலோக ரட்சகரின் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கப்ரைப் பற்றி விளக்கம் இல்லாததால் அவர்கள் மதீனாவில் அடங்கிய தோடு நின்று விட்டார்கள் என்று தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். (உன்கே கப்ர் கிகபர் நஹி) நபியவர்களின் கப்ர் ஷரீபு (மண்ணறை-) ஸஹாபாக்களின் இதயங்கள் ஆகும்

நபியவர்கள் இறந்து விட்டார்கள் என்று எவராவது கூறினால் அவர் எனது வாளுக்கு இரையாவார் என்று ஹஸரத் உமர் (ரலி) அவர்கள் கூறி ஆவேசமடைந்தார்கள். இதை அவர்கள்

PDF ISLAM

வெறும் உணர்ச்சி வசத்தில் மட்டும் கூறவில்லை. நமக்குள் நபியவர்கள் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) நீக்கமற நிறைந்திருக்கிறார்கள் என்பதை உணர்த்தவே ஹஸரத் உமர் (ரலி) இவ்வாறு உரைத்தார்கள். நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஸஹா பாக்களின் இதயங்களிலும். உயிர்களிலும் . உணர்விலும் நிறைந்து விட்டார்கள்.

மதீனாவில் தான் நபியவர்கள் அடங்கி விட்டார்கள் என்ற எண்ணத்துடன். நபியவர்களின் கப்ரு ஷரீபுக்கு மரியாதை செய்பவர்களுக்கு அடி விழுகிறது. ஆனால் மக்கா நகரம் நபியவர்களின் மீலாது- பிறப்பையும் புனித வாழ்க்கையையும் சூபக மூட்டுவதால் ஜனங்கள் அங்கு மெய்மறந்து கஃபா வை வலம் வருகின்றனர்.

நபிமார்களை மண் தின்னாது

நபியவர்களின் மெய்க் காதலர்களான அவ்லியாக்களே மண்ணில் மறைவதில்லை : அவர்கள் எப்படி மண்ணில் மறைந்து விடுவார்கள்? மண்ணுக்குள் விதைக்கப்படும் விதைகளைப் பார்த்து விட்டு. அது மண்ணுக்குள் சென்று அழிந்து விட்டது என்று சொன்னால் அது எத்தனை மதியீனமாகும்?. மண்ணுக்குள் சென்ற விதை முளைத்து. பயிராகி. தானிய மணிகளாக செழித்து நல்ல பலன் தருவதைப் பார்க்கிறோம். அதுபோல நபி (ஸல்லல்லாஹு அலைஹி

PDF ISLAM

வஸல்லம்) அவர்கள் நம் பார்வையிலிருந்து மறைந்த போதிலும், சஹாபாக்கள், தாபிஈன்கள், இமாம்கள், ஒலிமார்கள் வாயிலாக வந்து கொண்டே யிருக்கிறார்கள்.

அப்துல்லாஹ்வின் திரையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்)

நபியவர்களின் பிறந்த நாளை ரபிய்யுல் அவ்வல் மாதத்தில் மட்டுமின்றி, ஒவ்வொரு மாதத்திலும் கொண்டாடலாம். ஹலரத் ஆமினா அவர்கள் திரு வயிற்றில் நபியவர்கள் பிறந்த அந்த வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட காலம் தான். ஆனால் நபியவர்கள் திரையுடன் தினந்தோறும் பிறக்கிறார்கள். எப்படி? பிறக்கும் குழந்தைகளின் நாமங்கள் - முஹம்மது இஸ்மாயீல். முஹம்மது இபுறாகீம், முஹம்மது அப்துல் காதர், முஹம்மது அலி என்று நபியவர்களின் திரு நாமத்துடன் அழைக்கப் படுகின்றன.அப்துல்லாஹ்வின் திரையில் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) வருகிறார்கள்.

கப்ருக்குள் மறைந்து விட்டார்களா?

திருக்குர் ஆனை காகிதத்திலும் எழுதலாம் தோலிலும் பதிக்கலாம்; கல்லிலும் செதுக்கலாம். எங்கிருந்தாலும் அது குர் ஆன் தான். குர் ஆனுக்கு இந்த தன்மை இருக்கும் போது அதைக் கொண்டு வந்த நபியவர்கள் ஏன் நம்மில் வர முடியாது.? நபியவர்கள் காட்டிய தொழுகை, நோன்பு ஜக்காத்து, ஹஜ்ஜு -யாவும் நம்மில் வந்து விட்டன. அவர்களின்

PDF ISLAM

செயல்கள் ஒவ்வொன்றும் பின்பற்றப்படுகின்றன. எனவே நபியவர்கள் கப்ருக்குள் மறைந்து விட்டார்கள் என்று சொல்வதை விட்டும் தவ்பா செய்யுங்கள்

நபி இருந்தால் போதும்:

ஒரு பிரபல டாக்டரின் மருந்து, இன்ஜெக்ஷன் சிகிச்சை முறைகளைக் காட்டி விடுவதால் மட்டும் யாரும் (இத்மினான்) மனச் சாந்தி அடைவதில்லை. அந்த டாக்டர் தாம் தேவை. அதுபோல குர்ஆன் ஹதீஸ் மட்டும் இருந்தால் அதை கொண்டு நன்மை மனச் சாந்தி பெற முடியாது. முஹம்மது (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் இருந்தால் தான் நமக்கு சிகிச்சை (இலாஜ்) சாந்தி கிடைக்கும்.

ஸஹாபாக்களிடம் குர்ஆன் ஹதீஸ், கிதாப்கள் பிக்ஹு சட்டதிட்டங்கள் - போன்ற எதுவும் இருக்க வில்லை. நபியவர்கள் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) மட்டும் தான் இருந்தார்கள். மற்ற எதனுடைய தேவையுமின்றி அவர்கள் நேர்வழி பெற்றனர். ஆனால் இன்று நம்மிடம் குர்ஆன் ஹதீஸ் மார்க்க சட்ட நூல்கள் லட்சக்கணக்கில் இருந்தும், வழி கெடுவோரும் இலட்சக் கணக்கில் பெருகிக் கொண்டுதானி ருக்கின்றனர் இன்றும் கூட முஹம்மது (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் நமக்கு கிடைத்துவிட்டால் அவர்களை நாம் புரிந்து கொண்டால் போதும்- நாம் நேர்வழி பெறுவதற்கு.

PDF ISLAM

நபி இன்றி மீலாது இல்லை !

இது நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களின் பிறந்த நாள் விழா, குத்பாவுக்கு கதீப் உபந்நியாசம் செய்பவர் தேவை; ஜமா அத்துக்கு இமாம் தேவை திருமண விழாவிற்கு மணமகன் தேவை கூட்டத்துக்கு தலைவர் தேவை நபியவர்களின் மீலாது விழாவுக்கு - முஹம்மது (ஸல்) அவர்கள் வந்தால் தாம் அந்த விழா விழாவாக ஆகும். முஹம்மது (ஸல்லல்லாஹீ அலைஹி வஸல்லம்) வருவார்கள் என்றால் எப்படி வருவார்கள்? முஹம்மது (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) வரவில்லை யென்றால் மீலாது, மீலாது அல்ல.

நபியவர்கள் மறையாமல் இருந்தால் !

நபியவர்கள் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அப்படியே (மறையாமல்) இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? அவர்களை அப்படி வைக்க அல்லாஹ்வினால் முடியும். நபியவர்களைப் பற்றிய தேட்டத்தையும், மெய்க்காதலையும் வளர்க்கவே அவர்களை நம்மை விட்டும் மறைத்தான் நபியவர்கள் மறைந்ததால் தான் குர்ஆன் ஹதீஸ் தப்ஸீர் மார்க்க ஞான நூல்கள் தோன்றலாயின; மார்க்க உபந்நியாசிகள் (வாயிஸ்) தோன்றலாயினர். சூரியனே இருந்து விட்டால் சந்திரன், நட்சத்திரங்கள் தோன்ற முடியாது. அவைகள் தங்கள் சேவைகளைச் செய்ய

PDF ISLAM

வாய்ப்பும் இல்லாமலாகி விடும். இதே போல் நம் போன்ற சிறியோர்களுக்கு வாய்ப் பளிப்பதற்காகவே நபியவர்கள் மறைந்தார்கள். அல்லாஹ்வும் மறைவாக (பர்தாவில்) இருப்பதால் தான் அவனைப் பற்றிய தேட்டம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது

திருமறையின் அத்தாட்சி

திருக் குர்ஆன் ஒன்றே நபியவர்களின் ஹயாத்திற்கு (ஜீவியத்திற்கு) தக்க அத்தாட்சி (நிஷான்) ஆகும். பகலையும் அதன் வெளிச் சத்தையும் சூரியனைப்பற்றி நினைக்காமலிருக்க மாட்டார்கள். சந்திரனுடைய ஒளியின் குளிர்ச்சியை உணரக் கூடியவர்கள் சந்திரன் இருப்பதை உணரத் தவற மாட்டர்கள்.அதே விதமாக தீன்-சன் மார்க்கத்தையும், நபியவர்களின் நடை முறைகளையும் காணும் நாம் அதற்கு காரணமாகிய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஹயாத்தை - ஜீவித்திருப்பதை உணரத் தவறக் கூடாது. நாம் அனைவரும் நபியவர்களின் திருப்பொருட்டால் தான் (ஸத்கே ஸே) இருக்கின்றோம்.

டிரைவர் இல்லாமல் வண்டி ஓடுமானால் அது ஒரு பெரிய சாதனையாகும் நபியவர்கள் இருந்தும் தீனை நடத்தினார்கள் மறைவாக இருந்தும் தீன் என்ற வண்டியை நடத்துகிறார்கள் .

PDF ISLAM

நபியவர்களின் மகத்துவம் எத்தகையது?

முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மற்ற எல்லா நபிமார்களுக்கும் இறுதியில் வந்தாலும் அவர்களே உயர்ந்தவர்கள். முதலில் நமது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வந்திருந்தால் மற்ற நபிமார்கள் வரவேண்டிய தேவையே இருந்திருக்காது. மற்ற எந்த நபிமார்களாலும் தீன் - சன்மார்க்கம் பூர்த்தி யடையவில்லை. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைக் கொண்டுதான் தீன் ரிபூரணத்துவம் அடைந்தது. உதாரணமாக, மீலாது கூட்டங்களில் யாரை முதலில் போடுகிறார்கள். யாரை கடைசியில் போடுகிறார்கள் என்பது உங்களுக்கே தெரியும். சிறந்த பேச்சாளர்களையே இறுதியில் பேச விடுகிறார்கள்.

எல்லோருக்கும் முதலான நபியவர்கள் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கடைசியாகவந்து அவர்கள் பொருட்டால் சன்மார்க்க - இஸ்லாம் பரிபூரண மடைந்ததால், நபித்துவம் (நுபுவ்வத்) அவர்களுக்குப் பிறகு இல்லாமலாகிவிட்டது. நபி ஆதம் (அலை) முதற்கொண்டு ஈஸா (அலை) வரை தோன்றிய நபிமார்கள், முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நுபுவ்வத் - நபித்துவம் என்ற மணம் தங்களிடம் இருக்கும்வரை நபியாக இருந்து அந்த மணம் நீங்கியவுடன் சென்றுவிட்டார்கள்.

PDF ISLAM

நபியை ஒப்புக் கொள்ளாவிடில் ஈமான் இல்லை?

ஒவ்வொரு நபியுடைய காலத்திலும் அல்லாஹ் இருந்தான். தீனும் இருந்தது. வேதங்களும் இருந்தன. ஆனால் தீன்- மார்க்கம் பூர்த்தி அடையவில்லை. ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வெளிப் படையாக வராததால் தீன் பூர்த்தியடையவில்லை.

வேதங்களை உடையவர்கள் அல்லாஹ் வையும், வேதங்களையும், இறுதி நாளையும் கொண்டு விசுவாசம் கொண்ட போதிலும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை ஒப்புக் கொள்ளாத ஒரே காரணத்தால் தான் அவர்கள் ஈமான் கொண்ட மூமின்களாக ஆகவில்லை.

மதினாவில் இருக்கிறார்களா?

"அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மதீனாவில் இருக்கிறார்கள். தீன் குர்ஆனில் இருக்கிறது தீன்தார்கள் கப்ருஸ்தானில் இருக்கிறார்கள் - என்பது சாதரண மக்களின் எண்ணம்.

ஆனால் உண்மை அப்படியல்ல அல்லாஹ்வும் இங்கே இருக்கிறான் ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் இங்கே இருக்கிறார்கள். தீன் - சன்மார்க்கம் இங்கே இருக்கிறாது. ஆனால் அதை நாம் விளங்க வேண்டியது அவசியம்.

PDF ISLAM

சன்மார்க்கம் இங்கே இருக்கிறாது. ஆனால் அதை நாம் விளங்க வேண்டியது அவசியம்.

குர்ஆன் காகிதத்தில் இல்லை !

திருக்குர் ஆனிலுள்ள அல்ஹம்து ஸூராவிலிருந்து வன்னாஸ் வரை உள்ள ஆயத்துகள் யாவும் காகிதத்தில் இல்லை கிதாபில் உள்ளது. ஆயத்துக்களின் எழுத்துக்களே உண்மையில் குர்ஆன் அகிலமெங்கும் வியாபித்திருக்கிறது. (உதாரணம்) குர்ஆனில் மலையைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. மலை குர்ஆனில் இல்லை. வெளியில் இருக்கிறது. வானம் பூமியை பற்றி குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. அவை குர்ஆனில் இல்லை வெளியில் இருக்கின்றன. குர் ஆனை ஹாபிஸ் மனப்பாடம் செய்கிறார் குர்ஆனில் உள்ள யாவும் அவர் உள்ளத்தில் வந்து விடுகிறது.

நபியவர்கள் நம்மில் இருக்கிறார்கள் !

முஹம்மது (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள். நபி ஆதம் (அலை) முதற்கொண்டு ஈஸா (அலை) வரை எல்லா நபிமார்கள், ரசூல் மார்களிடமும், ஸஹாபாக்கள், தாபிஈன்கள், இமாம்கள், ஔலியாக்கள் அனைவரிடமும் மூமின்கள் இதயங்களிலும் நிறைந் திருக்கிறார்கள். தையல் நூல் தைக்கப்பட்ட துணியில் மறைந்து விடுவதைப் போல் நாயகம் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) மறைந்திருக்கிறார்கள். நம் நாவு கலிமா ஓதுகிறது: லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்

PDF ISLAM

என்று அல்லாஹ் தான் இலாஹ் என்பதை விளங்க வேண்டும். முஹம்மது ரசூல்லாஹ் அல்லாஹ்வின் தூதர் என்பதை விளங்க வேண்டும் நம்மிடம் தொழுகை நோன்பு, ஜக்காத்து ஹஜ்ஜு போன்ற மார்க்க அனுஷ்டானங்கள் நபியவர்களைக் கொண்டே குடி கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த உயிர் அவர்களுக் காகவே இருக்க வேண்டும். நம் கையில் இருக்கும் விதை எப்போது பயிராகும் என்றால் அதற்குரிய பூமியில் விதைக்கப்படும் போது தான் இதே போல், குர்ஆன் என்ற விதையும் நமக்குள் ஈமான் மூலம் வந்து மார்க்க அனுஷ்டானங்கள் மூலம் வெளிப்பட வேண்டும். அப்போதுதான் குர்ஆன் உயிராகும்; நம் மூலம் நபியவர்களின் மணம் பரிணமிக்கும்.

நபியவர்கள் நடைமுறையே குர்ஆன்

குர்ஆன் முழுவதும் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் நடைமுறையாகும். ஹஜ்ஜின் கிரியைகள் மூலம் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதாபில் தென் படுகிறார்கள்; தொழுகையாளி தொழும் போது ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் திருநாமமான அஹ்மது என்ற கோலத்தில் ஆகிறார். (நிலையில் அலிப், ருகூவில் ஹே, ஸஜ்தாவில் மீம், இருப்பில் தால் ஆகிறார்) இவ்வாறு நம் தொழுகையில் நபியவர்கள் தென்படவில்லை யென்றால் அது தொழுகையாகாது.

PDF ISLAM

ரஸூல் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) ஏன் நம்மில் வரமுடியாது ?

கிப்லா (மகான்) :கஃபத்துல்லாஹ் எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கப்பால் (மக்காவில்) இருந்த போதிலும் நாம் தொழுகைக்காக கிப்லாவை முன்னோக்கி எங்கு நின்றாலும் அங்கு கிப்லா வந்து விடுகிறது. இடையில் சுவர்கள் வீடுகள் சாக்கடை, கோயில்கள் போன்ற எவை இருந்தாலும் நாம் நிற்குமிடத்திற்கு கஃபா கிப்லா வந்து விடுகிறது.

* நேரம் (ஜமான்): நாம் இருந்த இடத்தில் தொழுகையின் நேரங்கள் மாறி மாறி வருகின்றன.

* நேரம் (ஜமான்): நாம் இருந்த இடத்தில் தொழுகையின் நேரங்கள் மாறி மாறி வருகின்றன.

* பயான் (கலாமுல்லாஹ்:) தொழுகையில் நாம் குர்ஆன் ஓதும் போது அல்லாஹ்வுடைய வஹீ நம்மில் வந்து விடுகிறது. (உதாரணமாக , ஒரு காகிதத்தில் குர்ஆன் வசனங்களை எழுதினால் வஹீ மூலம் இறங்கிய குர்ஆன் அதில் வந்து விடுகிறது. அந்த காகிதத்திற்கு தனிச்சிறப்பு ஏற்படுகிறது.)

* ரஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) கிப்லா, நேரம், பயான், (கலாமுல்லாஹ்-குர்ஆன்) இவை நாம் இருக்கு மிடத்திற்கு வந்து விடும் போது ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) ஏன் வர முடியாது?

PDF ISLAM

கலிமா எதைக் குறிக்கிறது?

கலிமா - லா இலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ்.

குழந்தை பிறந்தது - அதைப் படைத்தது யார்? அந்த அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை அதையே லாயிலாஹா இல்லல்லாஹு குறிக்கிறது. குழந்தை பிறந்ததும் ஒரு காதில் பாங்கும் மற்றொரு காதில் இகாமத்தும் ஓதப்படுகிறது. இதையே முஹம்மதுர் ரசூலுல்லாஹ் குறிக்கிறது அதே விதமாக குழந்தை பிறந்து உலகில் வருவதில் லாயிலாஹ இல்லல்லாஹு அதற்கு நாமம் சூட்டுவது. கத்னா செய்வது முஹம்மதுர் ரசூலுல்லாஹ். வாலிப வயதை அடைவது லாஇலாஹ இல்லல்லாஹ் நிக்காஹ்-திருமணம் செய்வது முஹம்மதுர் ரசூலுல்லாஹ். அதிகாலையில் எழுவது லாஇலாஹ இல்லல்லாஹ் ஒளு செய்வது தொழுவது முஹம்மதுர் ரசூலுல்லாஹ் பற்களைக் கொடுப்பது லாஇலாஹ இல்லல்லாஹ் மிஸ்வாக்செய்வது முஹம்மதுர் ரசூலுல்லாஹ்.

கண்களைக் கொடுப்பது லா இலாஹ இல்லல்லாஹ் சுர்மா இடுவது முஹம்மதுர் ரசூலுல்லாஹ் விரல்களில் நகங்களைக் கொடுப்பது லா இலாஹ இல்லல்லாஹ் அதை நீக்கி அழகு படுத்துவது முஹம்மதுர் ரசூலுல்லாஹ். முகத்தைக் கொடுப்பது லா இலாஹ இல்லல்லாஹ் அதில் தாடி வைப்பது முஹம்மதுர் ரசூலுல்லாஹ் வாயைக்

PDF ISLAM

கொடுப்பது லா இலாஹ இல்லல்லாஹ் அதில் கலிமா ஓதுவது முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்.

இவ்வாறு நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நம் ஒவ்வொரு அனுஷ்டானங்களிலும் காட்சி தருகிறார்கள். நம்மை ஒலு செய்யச் செய்கிறார்கள்; தொழச் செய்கிறார்கள்; நோன்பு நோற்க வைக்கிறார்கள்; ஜக்காத் கொடுக்கச் செய்கிறார்கள் ஹஜ்ஜ் நிறைவேற்றச் செய்கிறார்கள்.

அல்லாஹ் நம்மை படைத்து உயிர் அளிக்கின் றான்; முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நம்மில் தீன் - சன்மார்க்கம் தழைக்க செய்கிறார்கள். எங்கெங்கு எந்தெந்த உருவங்களில் தீன்-மார்க்க காரியங்கள் தென்படுகிறதோ அங்கெல்லாம் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இருக்கிறார்கள். இவ்வாறு லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ்வில் அல்லாஹ்வும் ரசூலும் கலந்து இருக்கிறார்கள்.

தீன் இருக்குமிடமெல்லாம் நபியவர்களின் காட்சி

முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) எங்கே என்று கேட்டால் (ஓஆமீர்!) தீன் எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் முஹம்மது (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இருக்கிறார்கள் என்று சொல்லி விடுவாயாக! நம்மில் தொழுகை வந்துவிடுவது ரசூலின் வருகை; நோன்பு நோற்பது ரசூலின் வருகை; ஜக்காத் கொடுக்கப்படுவது ரசூலின்

PDF ISLAM

வருகை; ஹஜ் நிறைவேற்றுவது ரசூலின் வருகை; இவ்வாறு ஒவ்வொரு நன்மையான காரியமும் நம்மில் வந்து விடுவது ரசூல் நம்மில் வருவதாகும்.

ஆகவே நீங்கள் ரசூல் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களை சந்திக்க நாடினால் தொழுகையின் மூலம் நற் காரியங்களைச் செய்வதன் மூலம் அவர்களைச் சந்தியுங்கள். தக்வா என்னும் பயபக்தியுடன் பேணுதலுடன் இருப்பதன் மூலம் நபியவர்களைச் சந்தியுங்கள். அவைகளிலேயே நபி (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் இருக்கிறார்கள். அதன் மூலமே முஹம்மது (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்கள் நமக்கு கிடைப்பார்கள்.

நபியவர்கள் இல்லையென்றால்
கியாமத் வந்துவிடும்

நன்மைகளை விடுவது ரசூலை விடுவதாகும். தீனுடைய அமல்களில் தான் ரசூல் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) இருக்கிறார்கள். தொழுகையின் ஒழு ரசூலின் ஞாபகார்த்தமாகும். ரசூலுடைய சுன்னத்தான காரியங்கள் நம்மில் வந்துவிட்டால் ரசூலும் நம்மிடம் வந்துவிடுவார்கள். தொழுகை, நோன்பு, ஜக்காத் இவை யாவும் ரசூல் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களின் நடை முறை களாகும். உயிர் போனாலும் அவற்றை விடாதீர்கள். ரசூல் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்)

PDF ISLAM

மண்ணுக்குள் மறைந்து விட்டார்கள் என்று கருதா தீர்கள்.

நபியவர்கள் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உங்களுக்குள் இருக்கிறார்கள். ரசூல் இல்லாவிட்டால் உலகம் முடிவடைந்து கியாம நாள் வந்துவிடும். ஆகவே நபியவர்களின் நேசகர்கள் இஸ்லாமிய பழக்க வழக்கங்களை உறுதியுடன் பின்பற்றுகிறார்கள்.

ஆயிரம் பேருக்கு விழா!
அண்ணலாருக்கு இல்லையா?

எவரெவருக்கெல்லாம் பிறந்தநாள் விழாக் கொண்டாடும் இந்த உலகம் எவர்கள் இல்லை யெனில் இப்பிரபஞ்ச மில்லையோ, அவர்களுக்காக விழாவெடுப்பத்தில் ஆயிரம் கேள்விகள் தொடுப்பது விசித்திரமே. இப்போது வழக்கிலுள்ள மீலாது விழாக்கள் பித்அத் புதுமையெனில் இக்கால கட்டத்தில் துன்யாவினுடைய நோக்கங்களுக்காக உலகத் தேவை களுக்காக வேண்டி உருவாக்கப் பட்டுள்ள- உலகளாவிய அளவில் உதயமாகியுள்ள- விழாக்கள் அனைத்தும் புதுமையன்றோ! சுதந்திர தின விழா, குடியரசு தினவிழா, குழந்தைகள் தின விழா, கொடி விழா , மரம் நடு விழா துப்பரவு நாள் விழா, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு தின விழா, இப்படி ஆயிரமாயிரம் விழாக்கள் குறிப்பிட்ட தினங்களிலோ அல்லது வருடாவருடம் ஒரு நாளிலோ கொண்டாடப்

PDF ISLAM

பட்டு வருகின்றன. நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லமவர்களின் காலத்திலே வழக்கிலில்லா வழக்கங்களனைத்தும் பித்அத் என பொதுப் படையாக கூறினால் பெருமானர் ஸல்லல் லாஹூ அலைஹி வஸல்லமவர்களின் நேரடி சுன்னத்தைத் தான்-வழிமுறைத்தான் பின்பற்றியாக வேண்டுமென வாதாடினால் இன்று நாம் இபாதத்திற்காகப் பயன் படுத்தும் கான்கிரீட் போட்ட பள்ளிக் கட்டிடங்களை இடித்து விட்டு நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம்) அவர்களின் காலத்து மஸ்ஜிதுந் நபிவியைப்போல் பேரிச்சம் ஓலையால் வேயப்பட்ட கூரையை எழுப்பி தரையில் மணல் பரப்ப வேண்டும்! பாண்ட், ஷர்ட், கைக் கடிகாரம், கண்ணாடி, சிலாக் ஷர்ட், இவையனைத்தையும் களைந்தாக வேண்டும். நம் இல்லங்களிலே வைத்துள்ள வகை வகையான பாத்திரங்களை எறிந்து மண்பான்டங்களை நிறப்ப வேண்டும். வீட்டிலுள்ள குளு குளு ஏ.சி. குளிர்பதன சாதனங்கள், காற்றாடி அரைவை இயந்திரம் அனைத்தையும் அகற்ற வேண்டும்! மின்சார விளக்குகளை விட்டு பிராணி கொழுப்புகளால் எரியும் விளக்குகளை ஏற்ற வேண்டும்!

சொகுசுப் பயணம் மேற்கொள்ளப் பயன் படும் கார், விமானம், கப்பல், மோட்டார், புகைவண்டி, இவற்றுக்கு விடை கொடுத்து ஒட்டகை அல்லது கோவேறு கழுதைகளைத் தேடிப் பிடிக்க வேண்டும்!

PDF ISLAM

காஃபி, தேனீர், குளிர்பானங்கள்-பக்கத்தில் வரக் கூடாது. பிரியாணியை விட்டு [illegible] டீரிய வேண்டும். அறுசுவை உண்டிகளையும் ஐந்து வகைக் கறிகளையும் அகற்றி விட்டு கோதுமை - ரொட்டித் துண்டுகளோடு ஐப்ரு செய்ய வேண்டும்.

ஒரு வேளை உண்டு மறுவேளைப் பட்டினியைக் கடைப் பிடிக்க வேண்டும்! எவ்வளவு பிரச்சனைகள் - இன்னும் ஆயிரமாயிரம் வினாக்கள் ஒவ்வொரு புதுமையும் பித்அத் என்றால் இயல்பாக எழுகின்றன.

எல்லாம் வல்ல இறைவன் நமது நபியின் சுன்னத்துக்களை பேணி நடப்பதையும் நாயகத்தின் ஷபா அத்தையும், நாயகத்தின் புகழ்பாக்களை பாடக்கூடியவர்களாகவும், மிக அதிகமாக ஸலவாத்து சொல்லக்கூடியவர்களாவும், நபிகள் நாயகத்தின் மீலாது விழாவை மிக்க மகிழ்ச்சியுடன் கொண்டாடுபவர் களாகவும் ஆக்கி இருலோகத்திலும் வெற்றி யடைந்த மக்களாக நம்மை தேர்ந்தெடுத்து கொள்வானாக! அவனது திருப் பொருத்தத்தையும் சந்திப்பையும் தந்தருள் புரிவானாக! ஆமின்.

அன்பர்களே! மேலே கூறப்பட்ட தலைப்பான மீலாது விழா மாநபிக்கே என்ற பயானை எனது சச்சாபீர் கலீமிஷாஹ் சர்க்கார் கிப்லா அவர்கள் நீண்ட காலத்திற்கு முன் பேசிய பேச்சை தொகுத்து உள்ளேன்.

PDF ISLAM

ஆஷிகே ரசூல் கலீமி ஷாஹ் சர்க்கார் கிப்லா அவர்களின் மண்ணறையை வல்ல ரஹ்மான் பிரகாசிக்க செய்வானாக! ஆமின்-!

மதீனத்து சிறுமிகள் தப்ஃ அடித்து மாநபியை வரவேற்று பாடிய பாடல்!

1. தலஅல் பத்ரு அலைய்னா
   மின் ஸனிய்யதில் வதா இ
2. வஜபஷ்ஷுக்ரு அலைய்னா
   மாத ஆலில்லாஹி தாஈ (தலஅல்பத்ரு)
3. அய்யுஹல் மப்ஊசு பீனா
   ஜிஃத பில் அம்ரில் முதா இ
4. அன்த கௌதுனா ஜமீஅன்
   யாமுஜம்மலத்திபாஇ (தலஅல்பத்ரு)
5. குன்ஷபீஅன் யா ஹபீபி
   யவ்ம ஹஷ்ரின் வஜ்தீமாஇ
6. ரப்பனா ஸல்லி அலா மன்
   ஹல்ல பீ கைரில் பிகாஇ (தலஅல்பத்ரு)
7. ஃபஸ்பிலிஸ்ஸித்ரி அலைய்னா
   வக்ஃபினா ஷர்ரன் நிசாஇ.
8. வஅஸ்னாஃபில் பலாயா
   யாமுஙஸன் குல்ல தாஇ (தலஅல்பத்ரு)
9. வஸனாத்துல்னாஸ் தவாமன்

PDF ISLAM

மின் நபிய்யிஷ்ம்பில் பிகா இ

10.வகதா ஆலின் வஸஹ்பின்

மாஸ ஆலில்லாஹிஸாஇ (தலஅல்பத்ரு)

மாஸ ஆலில்லாஹிஸாஇ (தலஅல்பத்ரு)
ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். ஸல்லல்லாஹு அலா முஹம்மதுயாரப்பிஸல்லி அலைஹி வஸல்லம்

ஸலாம் பைத்து

யா ஷஃபீ அல்வரா ஸலாமுன் அலைக்

யா நபிய்யல் ஹுதா ஸலாமுன் அலைக்

காத்திமுல் அன்பியா ஸலாமுன் அலைக்

ஸையிதுல் அஸ்ஃபியா ஸலாமுன் அலைக்

அஹ்மதுன் ஸ்ஸ மிஸ் ஐ க அஹதுன்

மர்ஹபா மர்ஹபா ஸலாமுன் அலைக்

வாஜிபுன் ஹுப்பு க அலல் மக்லூக்

யா ஹபீபல் உலா ஸலாமுன் அலைக்

அஃலமுல் ஹல்கி அஷ்ர ஃபுஷ் ஷீரஃபா.

அஃப்ளலுல் அஜ்கியா ஸலாமுன் அலைக்

குஷிஃபது மின்கலுல் மதில் ஹுலமீ.

அன்த பத்ருத்துஜா ஸலாமுன் அலைக்

தாலி உன் மின்க கவ்க புல் இர்ஃபான்

PDF ISLAM

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]



PDF ISLAM